ARTICLE 42 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00076
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 91–99
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

நுண்வெளிக் கிரகணங்களில் ஒக்கலிகர் பண்பாட்டுப் பதிவுகள் - பழங்குடி மரபின் சாயல்

முனைவர். தர்மலிங்கம் வை[1,*]

[1]உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி சித்தூர், கேரளா 678104, India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். தர்மலிங்கம் வை — tamilseminar12@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

மதுரை வட்டாரத்தைச் சார்ந்த நாவல் சு, வேணுகோபால் அவர்களின் நுண்வெளிக்கிரகணங்கள். இந்நாவல் ஒர் இனக்குழுச் சமூகம் என அறியத்தக்க ஒக்கலிகர் வாழ்வியலைப் பேசுகிறது. கன்னட மொழிபேசும் ஒக்கலிகர் வட கர்நாடகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள். இவர்கள் பண்பாட்டு பழக்க வழக்கங்கள் முற்றிலும் சிறப்புத் தன்மை உடையதாக விளங்குகிறது. இவரது பண்பாட்டு அடையாளங்கள் வழி இவர்கள் ஆதி இனக்குழு சமுதாயத்தின் எச்சமாக விளங்கும் பழங்குடி மரபோடு எண்ணத்தக்கவர்கள் என இக்கட்டுரை நிறுவ முற்படுகிறது. கூடவே, எழுத்தாளர் ச. வேணுகோபால் ஒக்கலிகர் சமூகத்தின் சடங்குகள் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் வழிபாட்டு முறைகளை சிறப்பாக பதிவுசெய்துள்ளார் என்ற கருதுகோளை முன்வைத்தும் அமைகிறது.

Keywords / திறவுச் சொற்கள்: தர்மக்கட்டு; குலத்தீட்டு கழித்தல்; களப்பட்டை சடங்கு; வீருமாரம்மாள் தெய்வ வழிபாடு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வை, மு. த. (2026). நுண்வெளிக் கிரகணங்களில் ஒக்கலிகர் பண்பாட்டுப் பதிவுகள் - பழங்குடி மரபின் சாயல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

முன்னுரை

இலக்கியம் மக்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது பொதுவான ஒரு வழக்காக அமைகிறது. மக்கள் வாழ்க்கை இயல்பாய் நிலத்தை முன்வைத்தே அமைகிறது, எனவேதான் ஐந்திணை நிலம் குறித்துப் பேசும் போது நிலத்தையும் பொழுதையும் முன்வைத்துப் பேசுகிறார் தொல்காப்பியர். குறிப்பாக நிலம் முதன்மையாக அமைகிறது. ஒரு நிலத்தினை தீர்மானிக்க அந்நிலத்தில் உள்ள கருப்பொருள்கள் முதன்மையாக அமைகிறது. கருப்பொருளை வைத்தே உரிப்பொருள் கட்டமைக்கப்படுகிறது.

இங்கு நிலம் திணை என்பதில் கருப்பொருள் முதன்மையாக அமையும் போது தொல்காப்பியர் கருப்பொருள் என்பதை "தெய்வம் உணாவே மா மரம் புட்பறை செய்தி யாழின் பகுதியொடு தொகை, அவ்வகை பிறவும் கருவென மொழிப" (**புலவர்குழந்தை :1968)** என்கிறார், ஆனால் நாற்கவிரச நம்பி அதனைப் பதினான்கு எனப் பட்டியலிடுகிறார். ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு ஊர்நீர் பூமரம் உணாப்பறை யாழ் பண் தொழில் எனக்கரு ஈர்எழுவகைத் தாகும் **(சா, திருஞானசம்பந்தம்;2018)** இதில் ஒரு நிலத்தின் எல்லா செயலுக்கும் தொழில் முதன்மையாகிறது. அது செயல் என அழைக்கப்படும் போது அச்செயலின் பின்னணியில்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

நுட்பமாக கருவி அமைவதைக் காண முடிகிறது. இவண் கருவி என்பது தொழில்கருவி என வில் அம்பு ஏர் அல்ல, இவண் நோக்கப்படுவது இசைக்கருவியாக அமைகிறது. எல்லா நிலத்திற்கும் அகத்திலும் புறத்திலும் கருவி இருப்பதை உற்றுநோக்கின் புலப்படும் அக்கருவிகள் நிலத்தின் செயலினை விளக்கும் முகமாகவும் அச்செயலோடு ஒத்திசைவு உடையதாகவும் அமைவதை இலக்கண இலக்கியங்கள் உறுதி செய்கின்றன.

ஐந்நிலத்திற்குரிய இசைக்கருவிகளான தோற்கருவி நரம்புக்கருவிகளில் முதன்மையாக இங்கு தோற்கருவி நோக்கப்படுகிறது. அவ்வகையில் ஐந்நிலத்திற்கும் முறையே தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, மணமுழவு, மீன்கோட்பறை, துடி எனும் கருவிகள் அமைகின்றன. சங்க இலக்கியங்கள் இப்பறையின் முழக்கம் அந்தந்த திணையின் செயலோடும் அவர்கள் வாழ்வியல் செயல்பாடுகளில் முதன்மை வகிப்பதையும் குறிப்பாக அத்திணைக்குரிய உரிப்பொருளை நுட்பமாக உணர்த்துவதில் அதன் இசை முழக்கம் பொருத்தப்பாடோடு அமைக் காணமுடிகிறது. தினைப்புனம் காப்பதில் தொண்டகப்பறையும் அதன்புறத்திணையான வெட்சியில் நிரைக்கவரும் போது தொண்டகப்பறை இசைப்பதையும் முல்லைத்திணையில் ஏழுதழுவல், ஆநிரை மேய்கும் போது எழுப்படும் ஏறுகோட்பறை எனப் பதிவு செய்துள்ளதைக்காண முடிகிறது. மருதநிலத்திற்குரிய மகிழ்வான நிகழ்வான திருமணம் ஊடல் கூடலோடு தொடர்புடைய மணமுழவு இசைக்கப்படுவதையும் தலைவன் வருகைக்காகக் கடற்கரையில் காத்திருக்கும் தலைவியின் சோகத்தில் மீன்கோட்பறை இசைப்படுவதையும் பிரிவு இரக்கம் கருணைக்கு அவை பொருந்திப்போவதை அக இலக்கியம் மட்டும் இல்லாது புற இலக்கியமான புறநானூறும் பதிவு செய்கிறது. “**ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப், புணர்ந்தோர் பூவணி அணிய, பிரிந்தோர் பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப**,”(புலியூர்கேசிகன்: 2010) பாலையில் வழிப்பறி செய்யும் போது கொள்ளையர்களும் வழிப்பறியில் இருந்து தப்பிக்க பாணர்களும் துடி முழக்கி நரம்பிசைத்து பஞ்சுரப்பண் பாடியதையும் காணமுடிகிறது.

இவண் இசைக்கருவி அவர்கள் வாழ்வின் எல்லா செயல்களையும் விளக்கும் முகமாகவும் அச்செயல்களின் அசைவுக்கு ஏற்றாற்போல விளங்குவதை காண்கிறோம். இத்தகைய நுட்பங்கள் நவீன இலக்கியத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை சு, வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள் வழி உணர முடிகிறது.

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு இசைக்கருவி என்பது போல ஒக்கலிகர் சமூகத்தின் வாழ்வியல் சடங்குகள் பெரும்பான்மையானவற்றில் உறுமி எனும் இசைக்கருவி இயங்குவதைக் சு. வேணுகோபால் பதிவுசெய்கிறார். எல்லா சமுகம் பற்றிய நவீன படைப்புகளிலும் மக்கள் வாழ்வோடு இணைந்த சடங்குகளில் இசைக்கருவிகள் இசைப்படும் என்றாலும் தனித்துவம் நுண்வெளிக்கிரகணங்களில் இருக்கிறது என்பதைக் இக்கட்டுரை விளக்குகிறது. குறிப்பாக அதனை ஒலியோடு பதிவு செய்யும் நுட்பம் சு, வேணுகோபாலுக்கு கைவரப்பெற்றிருக்கிறது.

இரண்டாவது பழங்குடி சமூக மரபில் திருமணப்பந்தம் தொடர்பாக தாலி அணியும் வழக்கம் இல்லை என்பதும் திருமண உறவில் கணவர் இறந்தபின் அவர்கள் குடும்பத்திலேயே அடுத்த நபரை திருமணம் செய்துகொள்ளும் தன்மையும் பழங்குடி மரபிற்கு உரியது. உடன் விதவைத் திருமணம் என்பதும் சிறப்பிற்குரியது இத்தன்மைகளை சு.வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணம் பேசுகிறது.

மூன்றாவது ஒக்கலிகர் சமூகத்தின் நம்பிக்கைகள் புதினங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முறை குறித்து நோக்கப்படுகிறது.

வடக்கு கர்நாடகத்தில் துங்கப்பத்ரா ஆற்றங்கரைக்கு அப்பால் வாழ்ந்தவர்கள்; ஆடு மாடு மேய்தல்; விவசாயம் செய்தல்; ஆயர்பாடி கண்ணனை வழிபட்டவர்கள் ஒக்கலிகர்கள் ஆயர்பாடி ஆகையால் பசு. பசுவின் மடிக்காம்பில் ஒக்கிய சிந்திய சிதறிய பாலில் தோன்றியவர்கள் என பசு ஆடு இவற்றோடு தொடர்புடையவர்கள். இசுலாமியர்களோடு பெண்கொடுப்பினைத் தொடர்பாக கருத்துவேறுபட்டு அவர்களிடம் இருந்து தப்பித்துத் தெற்கு நோக்கி ஓடிவந்தவர்கள் ஒக்கலிகர்கள் என்பது நாவலில் உள்ள செய்தி, இதனை உள்வாங்கி சேதுமாதவன் "முகமதியருக்குப் பெண்கொடுப்பதைவிட கீழ்த்தேசம் சென்றுவிடுவதே மேல் எனக்கருதி அனைவரும் இரவோடு இரவாக கீழ்தேசம் நோக்கிப் புறப்பட்டனர்" என்கிறார் **(சேதுமாதவன் :2001)** இவ்வாறாக வந்த சாதியில் இசுலாமியருக்கும் பயந்து இறந்துவிட அவளையே வீரமாத்தி என குலதெய்வமாக வழிபாடு செய்யும் ஒரு குலம். முன்னோர் வழிபாட்டை மேற்கொள்பவர் என்றும் காட்டுகிறார் ஆனால் இது நாவல் பதிவுக்கு முரணாக அமைகிறது

ஒக்கலிகர் மரபில் வந்த சித்தையன் திம்மையன் ரெங்கசாமி என மூன்று தலைமுறைகளின் கதையைச் சொல்லும் நாவலில் அவர்களது வரலாறு நம்பிக்கை சடங்குகள் பழக்க வழக்கங்கள் செல்லப்படுகின்றன. குறிப்பாக திருமணம் உள்ளிட்ட பல்வேறுசடங்குகளில் உறுமி பயன்படுத்தப்படுகிறது. மிக நுட்பமாக நோக்கினால் துடி மற்றும் ஏறுகோட்பறையின் மாற்று வடிவமாக ஊறுமியைச் சொல்ல முடியும்., இக்கருவி உடுக்கை வடிவில் பெரியதாக இருப்பதும் இதன் தோல் ஆட்டுத்தோலால் பெரும்பான்மை இருப்பதும் நுட்பமான குறிப்புகள் கொண்டது எனக் கருத முடிகிறது. இவை அவர்களின் பண்பாட்டோடுதொடர்புடையது என்றும் கருதமுடிகிறது. மேலும் ஒக்கலிகர் பற்றிக் குறிப்பிடும் வீரகண்ணன் அவர்கள் அவர்களை பௌத்த மரபினர்என்றும் சமண மரபினர் என்றும் தமிழகத்தின் பல்வேறு மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடி இனத்தோடு தொடர்புடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறார் உன் ஒக்கலிகர்கள் கௌடர்கள் என்று அழைக்கபடுவதை சுட்டிக்காட்டுகிறார், (https://tamilmanam.in) அவர்களின் இசைக்கருவி அவர்களின் மரபார்ந்த வேளாண்மை சார்ந்த விலங்குகளோடு தொடர்புடையதும் அதனை செயலுக்கு ஏற்றாற் போல் இசைக்கும்நுட்பமும் தனித்தன்மையோடு விளங்குகிறது.

ஒக்கலிகர் குலமக்கள் தங்கள் வாழ்வியல் சடங்குகளான திருமணம், விதவை மறுமணம் மறுமணம் எனும் தர்மக்கட்டு, குலத்தீட்டு கழித்தல், களப்பட்டை, குலதெய்வ வழிபாடு மற்றும் இறப்பு ஆகிய

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

நிகழ்வுகளின்போது நடத்தப்படும் சடங்குகளில் 'உறுமி'யைப் பயன்படுத்துகின்றனர்.

உறுமியின் இசையானது நடத்தப்படும் சடங்கின் தன்மையை உணர்த்துவதாகவும் அதனை தொலைவில் உள்ளவர்களும் உணர்ந்து கொள்ளும் விதமாகவும் அமைந்துள்ளது. மேலும் ஒக்கலிகர் குலத்தொழில் விவசாயம். அத்தொழிலில் பயிர்களின் வளர்ச்சி மெதுவாக அமையும். அதைப்போலவே அவர்கள் வாழ்வியல் சடங்குகளில் இசைக்கப்படும் உறுமியின் இசையும் மெதுவாகவே அமைகிறது. அச்சடங்குகளின் மெய்பாட்டுத் தன்மைக்கு ஏற்ப இசையும் அமைவதை அவர்களின் சடங்குகள் காட்டுகின்றன. இந்த இசைக்கூறுகளின் நுட்பங்களை சு.வேணுகோபால் காட்டுகிறார்.

திருமணச்சடங்கில் திருமண நிச்சயதர்த்தத்தின் போது முதலில் தாம்பூலத் தட்டுகளைச் சரிபார்க்கும் போது உறுமி இசைக்கப்படுகிறது. அங்குள்ளோர் தமக்கு முன்னுள்ள தட்டுகளைப் பார்க்கிறார்கள். பார்க்கும் போது தலையை அசைத்துக்கொண்டே பார்க்கிறார்கள். தலையை அசைப்பதைப் போலவே உறுமியிலிருந்து ஒலியும் எழுகிறது, அவ்வொலி,

"ரா-மா ரா-மா ரா-மா ரா-மா
ரா மா ரா மா ரா மா ரா மா
ராமா ராமா ராமா தா ராமா ராமா ராமா ராமா ராமா"(சு,வேணுகோபால்:1997) என்று அமைகிறது.

ஒரு நிகழ்வுமுடிந்தவுடன் அதனை அறிவிக்கும் முகமாக உறுமியில் இருந்து '**கொடுபு டொக்** எனும் ஓசையை எழுப்புகிறார்கள். அடுத்த நிகழ்வாக சம்மதம் வாங்குதல் எனும் நிகழ்வு நடைபெறுகிறது. அந்நிகழ்விற்கு வந்துள்ள அனைவரிடமும் ஒக்கலிகர் சாதியின் பெரியமனிதர் சம்மதம் கேட்கும் போதும், மணப்பெண், மணப்பெண்ணின் தாய்மாமன், மணமகனின் தாய்மாமன் ஆகியோரிடம் சம்மதம் கேட்கும் போதும் 'சம்மதவா' என்று கேட்க அவர்கள் சம்மதம் என்கின்றனர். இந்த சம்மதம் தெரிவிப்பதை அவர்களின் வாய் ஓசைக்கு ஏற்ப

"டெவ்வுக் டெவ்வெ டேடேவ
டெவ்வுக் டெவ்வெ டேடேவ" (சு,வேணுகோபால்:1997)

என்று உறுமியில் இருந்து ஒலியை எழுப்புகின்றனர். மணமகனுக்கு மணமகனின் தாய்மாமனும் மணமகளுக்கு மணமகளின் தாய்மாமனும் காலில் மிஞ்சியை வைக்கும் போது குனிந்து கால்விரலில் மாட்டுவதற்கான அசைவோடு

" ட்டிவீ டீ டிவிண்டா
ட் டிவீ டீ டிவிண்டா" (சு,வேணுகோபால்:1997)

என்று ஒரே வகையான இசை உறுமியில் எழுகிறது. திருமணத் தினத்தன்று மாப்பிள்ளை அழைப்பு நடைபெறும் போதும், பெண் அழைப்பு நடைபெறும் போதும் நடந்து செல்வதைக் குறிக்கும் விதமாக உறுமி இசைக்கப்படுகிறது. அது போலவே இறப்பின் போது உறவினர்கள் பிணத்திற்கு பட்டுத்துணி எடுத்துவரும்போது நடந்துவருகின்றனர். நடந்து வரக்கூடிய இந்த இரு நிகழ்வுகளின் போதும் உறுமி இசைக்கப்படுகிறது. ஆனால் இரண்டு ஓசை ஒரே தன்மை உடையதாய் இருப்பதில்லை. அவை

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

மாறுபடுகின்றன. திருமணத்தின் போது மணமக்கள் தங்கள் உறவினரோடு நடந்து வரும்போது உறுமியின் ஓசை,

"டட்டவி டட்டி டட்டவி டட்டி
டட்டவி டட்டி டட்டவி டட்டி" 72

என்று எழுகிறது. அதே உறுமி இறப்பு நடந்த பின் துணி எடுத்து வரும்போது,

"டெட்டே டேடே டெட்டெ டேடே
டெட்டே டேடே டெட்டெ டேடே"73

என்று எழுகிறது.

' திருமணத்தின் போது மங்கள இசையாக இசைக்கப்படும் உறுமியின் ஓசையை மங்கள ஓசை என்றும் ஒருவர் இறக்கும் போது இசைக்கப்படும் இசையை அபஸ்வரம் என்றும் சு. வேணுகோபால் குறிப்பிடுகிறார். அதில் அபஸ்வரத்தை அக்குபாரிக்கு தர்மக்கட்டு நடைபெறுவதற்கு ஒருமாதத்திற்கு முன்பு இசைக்கப்பட்டதையும் ரெங்கசாமி இறந்த போது இசைக்கப்பட்டது என இரண்டு இடங்களில் காட்டுகிறார். பிணத்தின் முன், உறுமி

"டெவ்வீவி டெவிக்கு டிவ்வி டெவிக்

டெவ்வீவி டெவிக்கு டிவ்வி டெவிக்" (சு,வேணுகோபால்:1997) என்று உறுமுகிறது. மங்கள ஒலியை திருமணத்தின் போது காட்டுகிறார். அவ்வொலியும் இரண்டு இடங்களில் இசைக்கப்படுகிறது. பத்மா என்ற பெண்ணின் திருமணத்தில் ஒக்கலிகரின் பாரம்பரிய இசைக்கருவியான உறுமியில் இருந்து

"டிடிகிடி டீடிகிடி

டிடிகிடி டீடிகிடி" (சு,வேணுகோபால்:1997) என்று எழுகிறது. இதே இசைதான் அக்குபாரிக்கு விதவைத் திருமணம் தர்மகட்டு நடைபெறும் போது இசைக்கப்படுகிறது.

திருமணத்தோடு தொடர்புடைய சடங்கில் ஒன்று புவ்வகுட்ட சடங்கு என்பதாகும். இச்சடங்கின் போது மணப்பெண்ணின் மடியில் உரலில் நெல்லிட்டு இடித்து புடைத்த பச்சரிசியைத் தருவர். அப்போது உரலில் இருந்து உலக்கைத் துக்குவதற்கும் உரலில் உலக்கை விழுவதற்குமான இசையை உறுமி எழுப்புகிறது. அவ்வோசை.

" டெட் டெவுக் டெட் டெவுக்
டெட் டெவுக் டெட் டெவுக்" (சு,வேணுகோபால்:1997)

என எழுகிறது. இது உரலில் இருந்து உலக்கையைத் தூக்கும் போது டெட் என்றும் உலக்கை உரலில் இறங்கும் போது டெவுக் எனவும் விழுவதாக உணரமுடிகிறது.

மரணத்தின் போது பிணத்தின் முன்னர் உறுமியில் இருந்து ஒசை
எழுப்புகிறார்கள். அவ்வோசை,
" ரா...மா...ரா...மா...ரா...மா...டெட்" (சு,வேணுகோபால்:1997)

என்று அமைகிறது. இதே ஓசை குலத்தீட்டு எனும் சடங்கில் வேறுசாதி ஆடவனோடு உறவு கொண்டதாகக் கருதி சாதியில் இருந்து விலக்கி வைத்து அவள் இறந்து போனதாக எண்ணி குலத்தீட்டு கழிக்கின்றனர், அப்போது வைக்கோலால் ஆன அப்பெண்ணின் உருவத்தை பாடையில் தூக்குகின்றனர், அப்போதும் ரா...மா...ரா...மா...ரா...மா...டெட் என்ற அதே ஓசையை எழுப்புகின்றனர். மரணமடைந்தவர்களுக்குக் கருமகாரியம்

நடைபெறும் போது இறந்தவர்கள் காக்கையாக வருவதாக எண்ணி சோறிடும் சடங்கில் அக்காக்கைக்கு சோறிட கா...கா.. வென அழைக்கும் போது,

" டீடீ, டவீட டட்டீ
டீடீ, டவீட டட்டீ" **78** (சு,வேணுகோபால்:1997) என உறுமியை எழுப்புகின்றனர்.

களப்பட்டை எனும் சடங்கு ஒக்கலிகர் சமூகத்தில் நடத்தப்படுகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த சடங்கின் போது பகையாளிகள் கடவுளின் முன்னிலையில் பால், நீர், கெஞ்சலம் ஆகியனவற்றை ஒருவருக்கு ஒருவர் மாற்றி குடிக்கின்றனர். இச்சடங்கின் போது இறைவன் ஒக்கலிகருக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படும் கம்பளியில் அமர்கின்றனர். அப்போது விதவையைத் திருமணம் செய்து கொண்டவர்கள் அதில் அமர அனுமதி கிடையாது. முப்பத்துமுக்கோடி தேவர்கள் அறிய அக்னி தேவன் அறிய வாயு தேவன் அறிய தங்கள் பகையை முறித்துக் கொள்கின்றனர். இதற்கு இறைவனுக்கு காணிக்கையை எண்ணி வைக்கின்றனர். அதற்கு ஏற்றார்போல் ஏற்ற இறக்கத்தோடு

" டிவ்விவ்வி டிவிக்கிடிண்டி
டிவ்விவ்வி டிவிக்கிடிண்டி" 79 என்று உறுமி அதிர்கிறது.

பழைய ஆதி சமூகத்தின் தன்மையோடு ஒப்புநோக்கும் தன்மையோடு இருப்பதைக் காட்டுகிறது.

பிற பண்பாட்டுப்பதிவுகள்

ஒக்கலிகர்கள் தாலி அணியும் பழக்கம் இல்லை. ஆனால் தாலியை பாதுகாப்பு வேண்டி அணிய முற்படுகின்றனர். குச்சனூரில் திருமணம் செய்து கொண்டு போன சீரங்குவின் மகள் பத்மாவின் தோழி ராணி டீச்சர் சந்தைக்கு வரும்போது பாதுகாப்பு வேண்டி தாலியை அணிந்துகொள்கிறாள். ராஜாங்கம் என்பவர் தன் மனைவியோடு தாலி இல்லாமல் சென்ற போது பஸ்நிலையத்தில் அவரது மனைவியை தாழ்ந்த சாதி என்றும் விலைமகள் என்றும் ஒரு கூட்டம் கூறி சண்டை ஏற்படும் போது தாலியின் பாதுகாப்பு கருதி அதனை அணிந்துகொள்ள முற்படுகின்றனர்.

பொட்டு

கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்கு இடம்பெயர்நதவர்கள் அவர்களின் பண்பாட்டு அடையாளங்கள் காலப்போக்கில் மாறிவருவதைக் காணமுடிகிறது. காயத்திரி வீட்டிற்கு வரும் பத்மா டீச்சர் காயத்திரியின் வீடான சித்தையன் கோட்டையைக் வீட்டைக்கண்டு வியந்து வரும்போது காயத்திரியின் அம்மா தங்கத்தின் போட்டோ ஒன்றினைப் பார்க்கிறார்கள் அப்போது புகைப்படத்தில் தங்கம் ஒற்றை நாமம் போட்டிருப்பதைப் பார்த்து வியந்து போகிறார். **ஒற்றை நாமம் போட்டதைப் போட்டோவில்தான் பார்த்திருக்கிறாள். இப்போது எல்லாம் வட்டக் குங்குமம் தான்"** (சு,வேணுகோபால்:1997)

ஒக்கலிகரும் கோரைப்பாயும்

ஒக்கலிகர் சாதியைச் சார்ந்தவர்கள் தங்கள் வாழ்வில் இரண்டு செயல்களைச் செய்ய மாட்டார்கள். ஒன்று புங்க மரத்தை விறகை எரிக்க

மாட்டார்கள், இரண்டு கோரைப்பாயில் படுக்க மாட்டார்கள். இந்த புங்க மரமும் கோரைப்பாயும் தான் அவர்கள் கர்நாகத்தில் இசுலாமியரிடமிருந்து தப்பித்து வரும் போது அவர்களைக் காப்பாற்றியன. கோரைப்புல்லில் மறைந்து வந்தவர்கள் ஒக்கலிகர்கள். துங்கபத்ரா ஆற்றைக் கடக்கும் போது ஒக்கலிகர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க புங்க மரம் வளைந்துகொடுத்து பாலாமாக நிற்க அதன் மீதேறி கடந்து வந்தார்கள். எனவே இவ்விரண்டையும் அவர்கள் பயன்படுத்துவது இல்லை. ஆனால் கால மாற்றங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையான தங்கம் அவளது மகன் தனகோபால் கோரைப்பாயையும் புங்க மரவிறகையும் பயன்படுத்துகின்றனர், இதனைக் கண்டு முதல் தலைமுறையைச் சார்ந்த மொம்மம்மா பாட்டியால் புலம்ப மட்டுமே முடிகிறது. சைக்கிளில் பாயைக் கொண்டு வந்து விற்கும் பாய்க்காரனிடம் தங்கம் வாங்கும்போது ,பாட்டி **ஒன்கு வெவஸ்தயிருக்கா நாம பாயில ஒக்காரக்கூடாது"திட்டினாள்.“தெரியும் சும்மா போங்க எல்லாம் நெட்டமாயிடுச்சு இந்த ஒண்ணுதான் கொறச்சல்""பாய்வேணாம்னாவேணா"** (சு,வேணுகோபால்:1997) என்று சொன்னாலும் தங்கம் பாயை வாங்கி விடுகிறாள். வறுமை அவர்களை வாட்ட அவர்களுக்கு அமர்வதற்கும் படுப்பதற்கும் பாய் தேவையாகி விடுகிறது.

விதவை மறுமணம்

ஒக்கலிகர் சடங்குளில் ஒன்றான தர்மக்கட்டு என்பது ஒக்கலிகர் பிரிவின் ஒரு பிரிவான மூணுபளவினரிடம் உள்ள வழக்கமாக இருக்கிறது, தர்மக்கட்டு என்பது விதவைத் திருமணம் என்பதாகு. ஒக்கலிகர் சாதியில் ஒரு பெண் ஒருமுறைவிதவை ஆனால் மீண்டும் இரண்டு முறை முதலில் திருமணம் முடித்த வீட்டிலேயே உள்ள பிற ஆண்களுக்கு மனைவியாக வாழலாம். முறைப்படி திருமணம் செய்துவைக்கப்படும் இதற்கு தர்மக்கட்டு என்று பெயர். இந்தத் தன்மை பழங்குடியினர் வாழ்வியலோடு ஒத்துப்போவதைக் காண முடிகிறது. இதனை ஒக்கலிகர் பிரிவில் உள்ளமற்றொரு பிரிவான குஞ்சடிகர் பிரிவினர் வெறுப்பாக பார்க்கின்றனர், அதனாலேயே மூணுபளவினரைக் கீழானவர்களாக எண்ணுகின்றனர்.

குஞ்சடிகர் பிரிவில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியில் ஊர் பெரிய மனிதர்கள் ஆண்கள் கம்பளித் துணியில் அமர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவது வழக்கம். அப்படியான பேச்சுவார்த்தை நடத்தும்போது எவரேனும் விதவையை திருமணம் செய்திருந்தால் அக்கம்பளியில் அமரக்கூடாது. விதவை மணம் அங்கீகரிக்கும் அதே சாதியில் அதனை தீட்டு போல பாவிக்கும் தன்மையும் காணப்படுகிறது. **களப்பட்டைச் சடங்கு**

களப்பட்டைச் சடங்கு எனப்படும் உறவினரிடையே உள்ள பகை போக்கி நட்பு கொண்டாட ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை வழிபாடு நடத்தும் குல தெய்வக்கோவில் செய்யும் சடங்கின் போது கம்பளியில் அமரக்கூடாது. இந்த நிலைகளில் சிறு மாற்றம் ஏற்படுவதை சு. வேணுகோபால் காட்டுகிறார்.

மேலும் பூப்பு சடங்குகளில் நாய்க்கு சோறு வைக்கும்நிகழ்வு மாறிவருவதை மிக எளிதாக வீரசிக்கு எனும் கதைமாந்தர் மூலம்

காட்டுகிறார். முன்றாம் தலைமுறை இரண்டாம் தலைமுறை இருந்த சடங்கு குறித்த நம்பிக்கைகள் மூன்றாம் தலைமுறைக்கு வரும்போது மிக எளிதாக கடந்து போவதை வேணுகோபால் பதிவு செய்கிறார். ரெங்கசாமி என்பவர் குழந்தையாக இருக்கும் போது அவரது பெற்றோர் சூடுவைத்தல் எனும் சடங்கைச் செய்ததைக் காட்டுகிறார். "**ரெங்கசாமியைத் தொட்டிலில் கிடத்தி மூன்று சூடு வைத்தார்கள். வீடே குழந்தையின் அழுகுரலால் பட்டு தெரித்தது. சூடுவைக்கப்பட்டவர்கள எல்லாம் வீரனாக வருவதில்லைதான். ஆனால் ரெங்கசாமிகென்று ஒருதோரனை வாகாக அமைந்துவிட்டது**" (சு,வேணுகோபால்:1997) என்று கூறி நம்பிக்கையின் அபத்தத்தைப் பதிவு செய்து அடுத்த தலைமுறை கடந்து போவதைக் காட்டுகிறார்,

வீருமாரம்மாள் தெய்வ வழிபாடு.

ஒக்கலிகர் சாதியைச் சார்ந்தவர் கதிரப்பா. அவரது குடும்பத்தில் மொத்தம் பத்து ஆண்கள். அவரே மூத்தவர். அவருக்குப் பின்னர் ஒன்பது பேர் அவரது தம்பிகள். கதிரப்பாவின் பட்டி போட்டு ஆடுமேய்த்து வரும் வேலை செய்துவருகிறார். அவரது மனைவி வீருமாரம்மாள். ஆடு மேய்த்து வந்த கதிரப்பா கள்ளர்களிடம் இருந்து ஆடுகளைக் காத்து வந்ததார். எந்த நிலையிலும் அவர் விழித்திருப்பது போலவே இருப்பதால் அவர் இருக்கும் இடம் சென்று ஆடுகளைத் திருட முடியாமல் கள்ளர்கள் தவித்தனர். ஒரு நிலையில் கள்ளன் ஒருவன் கதிரப்பா விழித்திருப்பதன் சூட்சமத்தை வீருமாரம்மாளிடம் கேட்ட தன் கணவனைப் பற்றிக் கேட்டவுடன் பெருமைக்காக தன் கணவனின் நிலையைக் கூறுகிறாள். "கதிரப்பா நின்று கொண்டு இருக்கும் போது குச்சியைக் கையில் பிடித்து இருந்தால் அவர் விழித்துக்கொண்டு இருக்கிறார்" என்றும், "அவர் குச்சியை நாடியின்கீழ் வைத்து இருந்து கை தொக்கிக்கொண்டு இருந்தால் அவர் தூங்குகிறார்" என்றும் அர்த்தம் என்கிறாள்.

அடுத்த நாள் கள்ளர்கள் கதிரப்பாவை கொன்று விட்டு ஆடுகளைத் திருடிச் சென்றுவிடுகின்றனர். கதிரப்பாவின் பிணத்தை எரியூட்டும் போது "நான் தான் என்கணவன் சாவிற்கு காரணம்" என்று கூறி தன் கைக்குழந்தையோடு தீயில் விழுந்து விடுகிறாள். அவளே பின்னர் குல தெய்வமாக வணங்கப்பெறுகிறாள். அவளது கொழுந்தனார் ஒன்பது பேரும் ஒன்பது திசையில் சென்று கள்வர்களைத் தேடி கண்டுபிடிக்க முடியாது போக ஆங்காங்கே இருந்து வாழ்கின்றனர். அந்த ஒன்பது பேரின் வம்சம் விருத்தி அடைந்து இன்று ஒக்கலிகர் நாற்பத்தெட்டு பிரிவுகளாக விளங்குகின்றனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஐம்பது வருடங்களுக்கு ஒரு முறை கூடி குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு வருடமும் ஒரு வேலமரக்கன்றை(கொத்து கொம்பு) நட்டு வைப்பது வழக்கமாக உள்ளது. இத்தகைய மரபு பழங்குடி மரபின் எச்சம் எனக்கருத இடமிருக்கிறது,

இந்த வீருமாரம்மாள் தெய்வத்தின் கோவிலில் இன்று ஒன்பதுபேரின் நினைவாக ஒன்பது பெரிய தூண்கள் இருப்பதை நுண்வெளிக்கிரகணத்தின் ஆசிரியர் காட்டுகிறார். அத்தெய்வ வழிபாட்டில் செய்யப்படும் சடங்கில் தெய்வத்திற்கு மூச்சுக்காற்று ஆகாது என்பதற்காக முகத்தைக் கட்டிக்கொண்டு பூசை செய்யும் முறை காணப்படுகிறது. இந்த

தன்மை பல குலதெய்வங்களுக்கு உரிய முறையாகும். இந்த தெய்வம் அம்மனாகப் போற்றப்படுகிறது. இந்தத் தெய்வத்திற்கு செய்யப்படும் சடங்கை நுண்வெளிக்கிரகணத்தில் புதினத்தில் காணமுடிகிறது.

*"**அரை ஓசை வந்தது. கர்ப்பகிரகத்தில் அபிசேகம் செய்தார்கள். தெய்வ அருள் வாக்குப்படி சொன்ன ஊரில் தனிய நெஞ்ச வண்ணப்பட்டு புடவையை உறுமி அழைத்து வந்தது . சேலைஉடுத்து சடங்கு நடந்தது. உறுமி பூசாரி ஊருக்கு கொத்து கொம்பு அழைக்கப்போனது. மல்லையபுரத்திலிருந்து பூசாரி கொத்து கொம்பு சொமந்து வந்த மண்டபத்துக்கு முன்னால் நட்டார். அது நாளடைவில் தளுத்து பெரிய வேலமரமா வளரும் எற்கனவே நாலு வேலமரம் அடர்ந்திருக்குது. நாங்க எல்லாம் பொம்மனம்பட்டிக்கு நடந்தே போனோம். முன்னால மேளதாளசேவை ஆட்டங்கள் ஆடிட்டுப் போனாங்க பெரியதனக்காரர் கோவில் உறுமி அதிர அவங்கவீட்டுச் சுமங்கலிப் பொண்ணு ஒம்போதடுக்கு போனத்த சுமந்துவந்தாங்க. சுமங்கிலிதான் சொமக்கனும். விதவை வாழாவெட்டி சொமக்கக்கூடாது. போனம் சுமக்குறப்போ வளையல் ஆடாம நூல் பின்னலில் கட்டிக்கிடுவாங்க. அம்மனுக்கு மூச்சுக்காத்து படக்குடாதங்கிறதால கண்ண மட்டும் விட்டிட்டு பட்டுத துணிய மொகத்துல கட்டிக்கிடுவாங்க "43***

என்று கூறி ஒக்கலிகர் குல தெய்வத்தின் கொடூர குணத்தையும் அதற்கு செய்யப்படும் சடங்குகளையும் காட்டுகிறார்.

முடிவுரை

எட்கர் தர்ஸ்டன் ஒக்கலிகரை (காப்பிலியர்கள்) என்று குறிப்பிட்டு பழங்குடிகளோடு ஒப்பிடுவதை முன்வைத்து வீரக்கண்ணன் இவர்கள் பழங்குடிகள் போல இருப்பதை காட்டுகிறார். சு வேணுகோபால் இவர்களை இவர்களது சடங்குகளை நுட்பாகப் பதிவுசெய்யும் தருவாயில் பழைய இசையோடு கூடிய வாழ்வியல் முறை சடங்குள் வழி பழங்குடி தன்மையோடு இருந்தவர் தற்காலத்தில் மாறிவருவதை பண்பாட்டுப்பதிவுகள் வழி காணமுடிகிறது.

துணைநூற் பட்டியல் (References)

1. சேதுமாதவன் S., (2001) ஒக்கலிக வரலாறு, ஒக்கலிகர் காப்பு, மகாஜன சங்கம் வெளியீடு, மதுரை
2. திருஞான சம்பந்தம்,சா (2018) நம்பிஅகப்பொருள் கதிர்பதிப்பகம், திருவையாறு
3. புலவர் குழந்தை, (1968), தொல்காப்பியம் பொருளதிகாரம் வேலா பதிப்பகம், ஈரோடு, இந்தியா,
4. புலியூர்கேசிகன் (2010) பிறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை
5. வேணுகோபால் சு, (1997) நுண்வெளிக்கிரகணங்கள்,வேர்கள் பதிப்பகம், நெய்வேலி
6. https://tamilmanam.in

© 2026 முனைவர். தர்மலிங்கம் வை. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..